கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர்.

முன்னிலை – திரு.T.V.**மணி, B.A.**, LL.B.,

கூடுதல் மாவட்ட நீதிபதி, ஸ்ரீவில்லிபுத்தூர்.

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5 ம் நாள் புதன்கிழமை

**குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு எண்.103/2025**

(CNR No.TNVR01-004525-2025)

| | |
|---|---|
| எந்த நீதிமன்றத்திலிருந்து இந்த மேல்முறையீடு முன்னிடப்பட்டுள்ளது. | உதவி அமர்வு நீதிமன்றம், சாத்தூர். |
| கீழமை நீதிமன்றத்தின் வழக்கு எண். | அமர்வு வழக்கு எண்.8/2018 |
| மேல்முறையீட்டாளரின் பெயர் மற்றும் விலாசம் | காளிராஜ், வயது 50/2025<br>த/பெ.அம்மாசி,<br>எண்.144, கிழக்கு தெரு,<br>சங்கரநத்தம், படந்தால் அஞ்சல்,<br>விருதுநகர் மாவட்டம். |
| எதிர்மேல்முறையீட்டாளர் பெயர் | அரசுக்காக காவல் ஆய்வாளர்,<br>சாத்தூர் நகர் காவல் நிலையம்,<br>குற்ற எண்.622/2014 |
| கீழமை நீதிமன்ற தீர்ப்புரை நாள் | 24.07.2025 |
| கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பும் தண்டனையும் | முடிவில் எதிரி இதச. பிரிவுகள் 353, 307 மற்றும் சுரங்கம் மற்றும் கனிமங்கள் (ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டம் 1957 பிரிவு 21(1)ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை 235(1) குவிமுச பிரிவின் கீழ் விடுதலை செய்தும், இத.ச. பிரிவு 379 ன் கீழ் எதிரி குற்றவாளி என தீர்மானித்து எதிரிக்கு இதச.379 ன் கீழான குற்றத்திற்கு ஒரு வருடம் மெய்காவல் தண்டணை விதித்து குவிமுச. பிரிவு 235(2)ன் கீழ் விசாரணை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இவ்வழக்கிற்காக |

| | |
|---|---|
| | எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த 04.11.2014 முதல் 05.03.2015 வரையான காலத்தை கு.வி.மு.ச.பிரிவு 428ன் கீழ் கழித்துக்கொள்ள உத்தரவிடப் படுகிறது. இவ்வழக்கில் பி.ஆர்.எண்.26/2022 ன் கீழ் கைப்பற்றப்பட்டுள்ள TN 23 X 3101 டிராக்டர் மற்றும் TN 67 S 5055 டிரைலரை எதிரியின் மனைவி மகேஸ்வரி என்பவர் இடைக்கால பொறுப்பில் பெற்றுச்சென்றுள்ளார். அரசு தரப்பில் மேற்படி டிராக்டர் மற்றும் டிரெய்லரை கைப்பற்றி வருவாய் கோட்டாட்சியரிடம் ஒப்படைத்து உரிய சட்ட விதிமுறைகளின் படி நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்படுகிறது. |
| கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பு மாற்றியமைக்கப்பட்டுள்ளதா? உறுதி செய்யப்பட்டுள்ளதா? நீக்கரவு செய்யப்பட்டுள்ளதா அதன் விபரம் | முடிவில், இந்த மேல்முறையீடானதை அனுமதித்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. சாத்தூர், உதவி அமர்வு நீதிமன்றத்தில் கடந்த 24.07.2025ல் அமர்வு வழக்கு எண்.8/2018ல் வழங்கிய தீர்ப்புரை இதன் மூலம் ரத்து செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சா.பொ.1 ஆன TN 23 X 3101 டிராக்டர் மற்றும் TN 67 S 5055 டிரைலரை இடைக்கால பொறுப்பில் பெற்று சென்றுள்ளதை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அவரே வைத்து கொள்ளவும் பிணைமுறியை ரத்து செய்யவும் ஒரு வேளை வைஷ சா.பொ.1 கைப்பற்றப்பட்டு கோட்டாட்சியர் வசம் ஒப்படைக்கப்பட்டிருந்தால் அதனை மீண்டும் உரிமையாளரிடம் |

| | |
|---|---|
| | ஒப்படைக்க அரசு தரப்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |

இந்த மேல்முறையீடானது கடந்த 29.07.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தும், மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜெகதீஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் கூடுதல் அரசு தரப்பு வழக்கறிஞர் திரு.M.முத்துகண்ணன், அவர்கள் முன்னிலையாகியும், விசாரணை நீதிமன்ற தீர்ப்புரை மற்றும் அரசுதரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரைகளையும் கேட்டறிந்த பின்னர், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து பிறப்பிக்கும்.

## தீர்ப்புரை

சாத்தூர், உதவி அமர்வு நீதிமன்றத்தில் கடந்த 24.07.2025 ல் அமர்வு வழக்கு எண்.8/2018 ல் வழங்கிய தீர்ப்புரையை ரத்து செய்யக் கோரி மேல்முறையீட்டாளர்/எதிரியால் இந்த மேல்முறையீடானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

– – – – –

2) **அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**

இவ்வழக்கின் புகார்தாரரான சாத்தூர் நகர் காவல்நிலைய ஆய்வாளர் சண்முகராஜ் மற்றும் தலைமை காவலர் முருகன் மற்றும் காவலர் கிருஷ்ணகுமார் ஆகியோர் 04.11.2014 ம் தேதி மணல் திருட்டு சம்பந்தமாக ரோந்து பணிக்கு சென்று 13.00 மணிக்கு சங்கரநத்தம் சுடுகாடு அருகில் திருட்டு மணல் அள்ளுவது சம்பந்தமாக கண்காணித்து வந்த போது TN 23 X 3101 என்ற பதிவு எண் கொண்ட டிராக்டரில் பொருத்தியிருந்த TN 67 S 5055 என்ற பதிவு எண் கொண்ட டிரைலரில் மணல் திருடி ஏற்றிக் கொண்டு டிராக்டரை ஓட்டி வந்த எதிரியை மேற்படி டிராக்டரை நிறுத்தச் சொல்லி புகார்தாரர் எச்சரித்தபோது எதிரி டிராக்டரை நிறுத்தாமல் வேகமாக ஓட்டிவந்து, புகார்தாரரைப் பார்த்து என்னை பிடிக்க வராதே, பிடிக்க முயற்சி செய்தால் டிராக்டரை உன் மீது ஏற்றி உன்னை கொன்றுவிடுவேன் என மிரட்டியும், புகார்தாரர் தொடர்ந்து எதிரியை பிடிக்க முயன்றபோது எதிரி இத்தோடு செத்து தொலைடா என்று சொல்லி புகார்தாரரின் மீது டிராக்டரை ஏற்றி கொலை முயற்சி செய்ததாகவும், புகார்தாரர் வேகமாக வந்த டிராக்டரின் முன்பக்கத்தில் இருந்து விலகி தப்பியிருக்காவிட்டால் அவர்

மீது டிராக்டரை ஏற்றி எதிரி இறப்பை ஏற்படுத்தியிருப்பார் என்றும், போலீஸ் பார்ட்டிகள் எதிரிகளை விரட்டி எதிரி மற்றும் டிராக்டரை பிடித்து அதில் இணைக்கப்பட்டிருந்த டிரைவரை பார்த்த போது டிரைலரில் சுமார் 1/2 யூனிட் மணல் இருந்தது என்றும், விசாரித்த போது எதிரி எவ்வித அரசு அனுமதியோ, உரிமமோ, இல்லாமல் வைப்பாற்றில் கனிம வளமான மணலை திருடியுள்ளார் என்றும், புகார்தாரரை அரசுபணியை செய்ய விடாமல் தடுத்தும், கொலை செய்யவும் முயற்சித்துள்ளார் என்றும், எனவே எதிரி மீது பிரிவுகள் 379, 353, 307 இதச. மற்றும் பிரிவு 21(1) சுரங்கம் மற்றும் கனிமங்கள் (ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டம் 1957ன் கீழ் தண்டிக்கக்கூடிய குற்றம் புரிந்துள்ளதாக சாத்தூர் நகர் காவல்ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**3)** விசாரணை நீதிமன்றத்தில் வழக்கின் அனைத்து ஆவணங்களும் எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் போதிய அவகாசம் கொடுத்து எதிரி மீதான சட்டபிரிவுகள் 379, 353, 307 இ.த.ச. மற்றும் பிரிவு 21(1) சுரங்கம் மற்றும் கனிமங்கள் (ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டம் 1957ன் கீழ் இ.த.ச பிரிவு 306 மற்றும் தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4(பி)(2) உடன் இணைந்த 4(சி)ன் படியும் குற்றச்சாட்டு வனைந்து விளக்கிக் கூறி கேட்ட போது எதிரி குற்றச்சாட்டை மறுத்துரைத்தார். எனவே கீழமை நீதிமன்றத்தில் அரசு தரப்பு விசாரணைக்காக உத்தரவிடப்பட்டுள்ளது.

**4)** விசாரணை நீதிமன்றத்தில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சி விசாரிக்கப்படவில்லை, சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

**5)** விசாரணை நீதிமன்றம் சாட்சிய விசாரணைக்கு பின்னிட்டு, வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், எதிரி இதச. பிரிவுகள் 353, 307 மற்றும் சுரங்கம் மற்றும் கனிமங்கள் (ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டம் 1957 பிரிவு 21(1)ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை 235(1) குவிமுச பிரிவின் கீழ் விடுதலை செய்தும், இத.ச. பிரிவு 379ன் கீழ் எதிரி குற்றவாளி என தீர்மானித்து எதிரிக்கு இதச.379ன் கீழான குற்றத்திற்கு ஒரு வருடம் மெய்காவல் தண்டனை விதித்து குவிமுச. பிரிவு 235(2)ன் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்புரையை எதிரி தரப்பில் ஆட்சேபித்து அதனை ரத்து செய்ய கோரி இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6) <u>மேல்முறையீட்டு குறிப்பாணையின் சுருக்கம் பின்வருமாறு</u>**

1. இந்த வழக்கில் மேல்முறையீட்டாளர்/குற்றம் சாட்டப்பட்டவர் பொய்யாகச் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும், அரசு தரப்பு வாதம் முழுவதும் அதிகாரப்பூர்வ சாட்சிகளை மட்டுமே சார்ந்துள்ளது என்றும், அவர்களின்

சாட்சியங்களில் குறிப்பிடத்தக்க முரண்பாடுகள் உள்ளன என்றும்,

2. அரசுத் தரப்பு சாட்சி எண் 1 சண்முக ராஜை விசாரித்தபோது, குற்றம் சாட்டப்பட்டவர் சம்பவ இடத்தில் கைது செய்யப்படவில்லை என்றும், கைப்பற்றல் மகஜர் (சான்று P3) சம்பவ இடத்தில் தயாரிக்கப்படவில்லை என்றும் அவர் தெளிவாக சாட்சியம் அளித்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கு மாறாக, சாட்சி எண் 2 முருகன், குற்றம் சாட்டப்பட்டவர் உண்மையில் சம்பவ இடத்தில் கைது செய்யப்பட்டார் என்று சாட்சியம் அளித்தார். இந்த முரண்பாடான கூற்றுகள், குற்றம் சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்டது மற்றும் கூறப்படும் சம்பவ இடத்தில் அவர் இருந்தது தொடர்பான அரசுத் தரப்பின் கூற்றின் மீது கடுமையான சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன என்றும்,

3. விசாரணை அதிகாரியும் மற்ற எதிர் தரப்பு காவல் அதிகாரிகளும், மணல் தோண்டியெடுக்கப்பட்டதாகக் கூறப்படும் உண்மையான இடத்திற்குச் சென்று பார்க்கவில்லை என்பதை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளத் தவறிவிட்டது. மேலும், எதிர் தரப்பு காவல்துறையினர் டிராக்டரிலிருந்து மீட்கப்பட்ட மணலின் அளவை அளக்கவோ அல்லது எடைபோடவோ தவறிவிட்டனர். இதன் விளைவாக, சட்டவிரோதமாக மணல் தோண்டியெடுக்கப்பட்டதாகக் கூறப்படும் இடத்தின் சரியான இருப்பிடத்தை அரசுத் தரப்பு நிரூபணம் செய்ய தவறிவிட்டது என்றும்,

4. மணல் அள்ளுவதற்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் மண்வெட்டி மற்றும் தட்டு போன்ற பொருள்கள் மீட்கப்பட்டது தொடர்பான அரசுத் தரப்பு சாட்சிகளின் வாக்குமூலங்களில் உள்ள முரண்பாடுகளை விசாரணை நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது என்று சமர்ப்பிக்கப்படுகிறது. சாட்சி எண் 2 மற்றும் சாட்சி எண் 6 ஆகியோர் அத்தகைய பொருள்கள் எதுவும் மீட்கப்படவில்லை என்று திட்டவட்டமாக மறுத்த நிலையில், கிராம நிர்வாக அலுவலரான சாட்சி எண் 4 முருகேசன், மேல்முறையீட்டாளர்/குற்றம் சாட்டப்பட்டவரிடமிருந்து காவல்துறை இந்தக் கருவிகளை மீட்டதாகக் கூறினார். இந்த முரண்பாடுகள் அரசுத் தரப்பு வழக்கின் நம்பகத்தன்மையைக் குலைக்கின்றன என்றும்,

5. புலனாய்வு அதிகாரியால் தயாரிக்கப்பட்டு, சான்று P-3 எனக் குறிக்கப்பட்ட பறிமுதல் அறிக்கையில், குற்றம் சாட்டப்பட்ட டிராக்டர் மேல்முறையீட்டாளர்/குற்றம் சாட்டப்பட்டவரிடமிருந்து மீட்கப்பட்டதாகப் பதிவு செய்யப்படவில்லை என்றும், அதன்மூலம் வழக்கின் வாதம் பலவீனமடைகிறது என்றும்,

6. மேலும், புலனாய்வு அதிகாரி, சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் இடத்தை உறுதிப்படுத்தத் தவறியது, சம்பவத்தை அடையாளம் கண்டு விசாரணை செய்வதற்காக ஒரு கண்காணிப்பு மகஜரையோ அல்லது ஒரு தோராயமான வரைபடத்தையோ தயாரிப்பதில் ஏற்பட்ட ஒரு முக்கியக் குறைபாடு ஆகும் என்றும்,

7. முறையான விசாரணை அல்லது உறுதிப்படுத்தும் சான்றுகள்

இன்றி, எதிர் தரப்பு காவல்துறையினரால் இந்த வழக்கு மேல்முறையீட்டாளர்/குற்றம் சாட்டப்பட்டவர் மீது இயந்திரத்தனமாகவும் தன்னிச்சையாகவும் திணிக்கப்பட்டதாகத் தெரிகிறது என்பதை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளத் தவறிவிட்டது என்றும்,

மேலே கண்ட இம்மேல்முறையீட்டை காரணங்களினாலும் அனுமதித்து சாத்தூர், உதவி அமர்வு நீதிமன்றத்தில் கடந்த 24.07.2025 ல் அமர்வு வழக்கு எண்.8/2018 ல் வழங்கிய தீர்ப்புரையை ரத்து செய்யக் கோரி மேல்முறையீட்டாளர் பக்கம் வணக்கமாய் பிரார்த்திக்கப்படுகிறது.

7) இம்மேல்முறையீட்டினில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள்,

1) இந்த மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா?

2) சாத்தூர், உதவி அமர்வு நீதிமன்றத்தில் கடந்த 24.07.2025 ல் அமர்வு வழக்கு எண்.8/2018 ல் வழங்கிய தீர்ப்புரையை ரத்து செய்யப்படத்தக்கதா?

8) <u>பிரச்சனை 1 மற்றும் 2 க்கான தீர்வு</u>

(8–i) இந்த மேல்முறையீட்டாளர் தரப்பில், வாதுரையின் பொழுது ஸ்ரீவில்லிபுத்தூர், உதவி அமர்வு நீதிமன்றத்தில் கடந்த 24.07.2025 ல் அமர்வு வழக்கு எண்.8/2018 ல் வழங்கிய தீர்ப்பு முடிவான, இத.ச. பிரிவு 379 ன் கீழ் எதிரி குற்றவாளி என தீர்மானித்து எதிரிக்கு இதச.379 ன் கீழான குற்றத்திற்கு ஒரு வருடம் மெய்காவல் தண்டணை விதித்து குவிமுச. பிரிவு 235(2)ன் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள மேற்படி தீர்ப்பை எதிர்த்து இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(8–ii) அரசு தரப்பில் இந்த மேல்முறையீட்டாளருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளாக இ.த.ச பிரிவுகள் 353, 307 மற்றும் சுரங்கம் மற்றும் கனிமங்கள் (ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டம் 1957 பிரிவு 21(1)ன் கீழ் குற்றவாளி இல்லை என விசாரணை நீதிமன்றம் முடிவு கண்டு, மேல்முறையீட்டாளரை கு.வி.மு.ச பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளித்துள்ளதை எதிர்த்து அரசு தரப்பில் மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதும் மேல்முறையீடு வாதுரை சமயத்தில் எடுத்துரைக்கப்பட்டது.

(8–iii) இம்மேல்முறையீடு வாதுரை சமயத்தில் மேல்முறையீட்டாளர்/ எதிரி தரப்பில் மேல்முறையீட்டிற்கான காரணத்தை பொறுத்து கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களால் வாதுரைக்கப்பட்டதை பரிசீலிக்கும் பொழுது, "இந்த வழக்கில் மேல்முறையீட்டாளர்/குற்றம் சாட்டப்பட்டவர் பொய்யாகச் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும், அரசு தரப்பு வாதம் முழுவதும் அதிகாரப்பூர்வ சாட்சிகளை மட்டுமே சார்ந்துள்ளது என்றும், அவர்களின் சாட்சியங்களில் குறிப்பிடத்தக்க முரண்பாடுகள் உள்ளன என்றும்,

அரசுத் தரப்பு சாட்சி எண் 1 சண்முக ராஜை விசாரித்தபோது, குற்றம் சாட்டப்பட்டவர் சம்பவ இடத்தில் கைது செய்யப்படவில்லை என்றும்,

கைப்பற்றல் மகஜர் (சான்று P3) சம்பவ இடத்தில் தயாரிக்கப்படவில்லை என்றும் அவர் தெளிவாக சாட்சியம் அளித்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கு மாறாக, சாட்சி எண் 2 முருகன், குற்றம் சாட்டப்பட்டவர் உண்மையில் சம்பவ இடத்தில் கைது செய்யப்பட்டார் என்று சாட்சியம் அளித்தார். இந்த முரண்பாடான கூற்றுகள், குற்றம் சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்டது மற்றும் கூறப்படும் சம்பவ இடத்தில் அவர் இருந்தது தொடர்பான அரசுத் தரப்பின் கூற்றின் மீது கடுமையான சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன என்றும்,

விசாரணை அதிகாரியும் மற்ற எதிர் தரப்பு காவல் அதிகாரிகளும், மணல் தோண்டியெடுக்கப்பட்டதாகக் கூறப்படும் உண்மையான இடத்திற்குச் சென்று பார்க்கவில்லை என்பதை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளத் தவறிவிட்டது. மேலும், எதிர் தரப்பு காவல்துறையினர் டிராக்டரிலிருந்து மீட்கப்பட்ட மணலின் அளவை அளக்கவோ அல்லது எடைபோடவோ தவறிவிட்டனர். இதன் விளைவாக, சட்டவிரோதமாக மணல் தோண்டியெடுக்கப்பட்டதாகக் கூறப்படும் இடத்தின் சரியான இருப்பிடத்தை அரசுத் தரப்பு நிரூபணம் செய்ய தவறிவிட்டது என்றும்,

மணல் அள்ளுவதற்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் மண்வெட்டி மற்றும் தட்டு போன்ற பொருள்கள் மீட்கப்பட்டது தொடர்பான அரசுத் தரப்பு சாட்சிகளின் வாக்குமூலங்களில் உள்ள முரண்பாடுகளை விசாரணை நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது என்று சமர்ப்பிக்கப்படுகிறது. சாட்சி எண் 2 மற்றும் சாட்சி எண் 6 ஆகியோர் அத்தகைய பொருள்கள் எதுவும் மீட்கப்படவில்லை என்று திட்டவட்டமாக மறுத்த நிலையில், கிராம நிர்வாக அலுவலரான சாட்சி எண் 4 முருகேசன், மேல்முறையீட்டாளர்/குற்றம் சாட்டப்பட்டவரிடமிருந்து காவல்துறை இந்தக் கருவிகளை மீட்டதாகக் கூறினார். இந்த முரண்பாடுகள் அரசுத் தரப்பு வழக்கின் நம்பகத்தன்மையைக் குலைக்கின்றன என்றும்,

புலனாய்வு அதிகாரியால் தயாரிக்கப்பட்டு, சான்று P–3 எனக் குறிக்கப்பட்ட பறிமுதல் அறிக்கையில், குற்றம் சாட்டப்பட்ட டிராக்டர் மேல்முறையீட்டாளர்/குற்றம் சாட்டப்பட்டவரிடமிருந்து மீட்கப்பட்டதாகப் பதிவு செய்யப்படவில்லை என்றும், அதன்மூலம் வழக்கின் வாதம் பலவீனமடைகிறது என்றும்,

மேலும், புலனாய்வு அதிகாரி, சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் இடத்தை உறுதிப்படுத்தத் தவறியது, சம்பவத்தை அடையாளம் கண்டு விசாரணை செய்வதற்காக ஒரு கண்காணிப்பு மகஜரையோ அல்லது ஒரு தோராயமான வரைபடத்தையோ தயாரிப்பதில் ஏற்பட்ட ஒரு முக்கியக் குறைபாடு ஆகும் என்றும்,

முறையான விசாரணை அல்லது உறுதிப்படுத்தும் சான்றுகள் இன்றி, எதிர் தரப்பு காவல்துறையினரால் இந்த வழக்கு மேல்முறையீட்டாளர்/குற்றம் சாட்டப்பட்டவர் மீது இயந்திரத்தனமாகவும் தன்னிச்சையாகவும் திணிக்கப்பட்டதாகத் தெரிகிறது என்பதை விசாரணை

நீதிமன்றம் கருத்தில் கொள்ளத் தவறிவிட்டது"

(8–iv) ஆனால் அரசு தரப்பில் கற்றறிந்த அரசு கூடுதல் வழக்கறிஞர் அவர்களின் வாதுரையின் பொழுது, அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச பிரிவு 379 யை பொறுத்தமட்டில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.7 வரையானவர்களின் சாட்சியங்களிலிருந்தும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையான சான்றாவணங்களிலிருந்தும், சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதன் மூலமாகவும் அரசு தரப்பு வழக்கு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், விசாரணை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புரை சரியானது என்றும் மேல்முறையீட்டை தள்ளுபடி செய்து விசாரணை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புரையை உறுதி செய்ய வேண்டுமாய் வாதுரை செய்யப்பட்டது.

(8–v) எனவே மேல்முறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களால் வாதுரைக்கப்பட்டதையும், அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களால் வாதுரைக்கப்பட்டதையும் பரிசீலிக்கும் பொழுதும் விசாரணை நீதிமன்றத்தில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களிலிருந்தும் சான்று பொருளிலிருந்தும் விசாரணை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புரையையும் நன்கு ஆராய்ந்து பார்க்கும் பொழுது, "இந்த வழக்கில் மேல்முறையீட்டாளர்/குற்றம் சாட்டப்பட்டவர் பொய்யாகச் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும், அரசு தரப்பு வாதம் முழுவதும் அதிகாரப்பூர்வ சாட்சிகளை மட்டுமே சார்ந்துள்ளது என்றும், அவர்களின் சாட்சியங்களில் குறிப்பிடத்தக்க முரண்பாடுகள் உள்ளன என்றும்,

அரசுத் தரப்பு சாட்சி எண் 1 சண்முக ராஜை விசாரித்தபோது, குற்றம் சாட்டப்பட்டவர் சம்பவ இடத்தில் கைது செய்யப்படவில்லை என்றும், கைப்பற்றல் மகஜர் (சான்று P3) சம்பவ இடத்தில் தயாரிக்கப்படவில்லை என்றும் அவர் தெளிவாக சாட்சியம் அளித்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கு மாறாக, சாட்சி எண் 2 முருகன், குற்றம் சாட்டப்பட்டவர் உண்மையில் சம்பவ இடத்தில் கைது செய்யப்பட்டார் என்று சாட்சியம் அளித்தார். இந்த முரண்பாடான கூற்றுகள், குற்றம் சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்டது மற்றும் கூறப்படும் சம்பவ இடத்தில் அவர் இருந்தது தொடர்பான அரசுத் தரப்பின் கூற்றின் மீது கடுமையான சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன என்றும்,

விசாரணை அதிகாரியும் மற்ற எதிர் தரப்பு காவல் அதிகாரிகளும், மணல் தோண்டியெடுக்கப்பட்டதாகக் கூறப்படும் உண்மையான இடத்திற்குச் சென்று பார்க்கவில்லை என்பதை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளத் தவறிவிட்டது. மேலும், எதிர் தரப்பு காவல்துறையினர் டிராக்டரிலிருந்து மீட்கப்பட்ட மணலின் அளவை அளக்கவோ அல்லது எடைபோடவோ தவறிவிட்டனர். இதன் விளைவாக, சட்டவிரோதமாக மணல் தோண்டியெடுக்கப்பட்டதாகக் கூறப்படும் இடத்தின் சரியான இருப்பிடத்தை அரசுத் தரப்பு நிரூபணம் செய்ய தவறிவிட்டது என்றும்,

மணல் அள்ளுவதற்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் மண்வெட்டி மற்றும் தட்டு போன்ற பொருள்கள் மீட்கப்பட்டது தொடர்பான அரசுத் தரப்பு சாட்சிகளின் வாக்குமூலங்களில் உள்ள முரண்பாடுகளை விசாரணை நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது என்று சமர்ப்பிக்கப்படுகிறது. சாட்சி எண் 2 மற்றும் சாட்சி எண் 6 ஆகியோர் அத்தகைய பொருள்கள் எதுவும் மீட்கப்படவில்லை என்று திட்டவட்டமாக மறுத்த நிலையில், கிராம நிர்வாக அலுவலரான சாட்சி எண் 4 முருகேசன், மேல்முறையீட்டாளர்/குற்றம் சாட்டப்பட்டவரிடமிருந்து காவல்துறை இந்தக் கருவிகளை மீட்டதாகக் கூறினார். இந்த முரண்பாடுகள் அரசுத் தரப்பு வழக்கின் நம்பகத்தன்மையைக் குலைக்கின்றன என்றும்,

புலனாய்வு அதிகாரியால் தயாரிக்கப்பட்டு, சான்று P3 எனக் குறிக்கப்பட்ட பறிமுதல் அறிக்கையில், குற்றம் சாட்டப்பட்ட டிராக்டர் மேல்முறையீட்டாளர்/குற்றம் சாட்டப்பட்டவரிடமிருந்து மீட்கப்பட்டதாகப் பதிவு செய்யப்படவில்லை என்றும், அதன்மூலம் வழக்கின் வாதம் பலவீனமடைகிறது என்றும்,

மேலும், புலனாய்வு அதிகாரி, சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் இடத்தை உறுதிப்படுத்தத் தவறியது, சம்பவத்தை அடையாளம் கண்டு விசாரணை செய்வதற்காக ஒரு கண்காணிப்பு மகஜரையோ அல்லது ஒரு தோராயமான வரைபடத்தையோ தயாரிப்பதில் ஏற்பட்ட ஒரு முக்கியக் குறைபாடு ஆகும் என்றும்,

முறையான விசாரணை அல்லது உறுதிப்படுத்தும் சான்றுகள் இன்றி, எதிர் தரப்பு காவல்துறையினரால் இந்த வழக்கு மேல்முறையீட்டாளர்/ குற்றம் சாட்டப்பட்டவர் மீது இயந்திரத்தனமாகவும் தன்னிச்சையாகவும் திணிக்கப்பட்டதாகத் தெரிகிறது என்பதை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளத் தவறிவிட்டது"

(8–vi) மேற்படி மேல்முறையீட்டாளர் தரப்பில் மேற்காணும் வகையில் வாதுரைக்கும் பொழுது அதனை மறுத்து அரசு தரப்பில் வாதுரைக்கப்பட்டதாக காண முடியவில்லை. மேலும் மேல்முறையீடு வாதுரை சமயத்தில் மேல்முறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களால் கீழ்காணும் முன்தீர்வுரையை சுட்டிக்காட்டி வாதுரை மேற்கொள்ளப்பட்டது.

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

DATED 29.09.2022

Crl.R.C.No.876 of 2019

1) Vignesh

2) Manoharan ... Petitioners

Vs.

The State represented by
The Sub–Inspector of Police,
Kattumannarkoil Police Station,

Kattumannarkoil, Cuddalore District
in Cr.No.224 of 2018

12. .......... Now, the petitioners were convicted for the offences under Sections 379 and 430 of IPC. In order to prove the charge for the offence under Section 379 of IPC, it is settled law that the prosecution must to establish essential factors, that the accused had dishonestly taken the property, that the property was movable, that the property was taken out of the possession of another person/complainant, that it was taken without the consent of that person/complainant and that there must be some moving of the property in order to accomplish the taking of it. In the light of the said principle, it has to be seen whether the prosecution had proved the charge for the offence under Section 379 of IPC .......... There was no independent witness for seizure and as such PW1 and PW2, who are the Police Officials of the respondent, stood as witnesses for the seizure and arrest. The prosecution failed to establish that the river sand was stolen from the river and was not purchased from anybody. The prosecution proved that the sand is a river sand, by the certificate issued by the Public Works Department dated 27.06.2018, which was marked as Ex.P3. ..... However, the prosecution failed to establish that the said river sand was stolen by the petitioners from the river. When it being so, the prosecution failed to prove the offence under Section 379 of IPC. That apart, the prosecution also failed to place any evidence to establish that the petitioners had trespassed into the Government land viz, The river, Kollidam and had stolen the river sand. Further, the prosecution also failed to establish that they illegally transported the same and thereby committed the offence. .........

16. In view of the above, the conviction judgments made in Crl.A.No.19 of 2019 dated 26.07.2019 by the Hon'ble II Additional District and Sessions Court, Chidambaram, Cuddalore District and in CC.No.62 of 2018 dated 22.01.2019 by the learned District Munsif cum Judicial Magistrate, Kattumannarkoil, Cuddalore District, are hereby set aside. The fine amount, if any, paid by the petitioners shall be refunded to them. The bail bond, if any, executed by the petitioners shall stand cancelled.

மேற்காணும் முன்தீர்வுரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் இவ்வழக்கிற்கு பொருந்தக்கூடியதாக உள்ளது என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(8–vii) எனவே இருதரப்பிலும் வாதுரைக்கப்பட்டதை ஆராய்ந்தும் வழக்கு கோப்புகளை பரிசீலித்தும் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டான இ.த.ச பிரிவு 379 யை அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் எதிரியானவர் மேற்காணும் இ.த.ச பிரிவு 379 ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்தும், சாத்தூர் உதவி அமர்வு நீதிமன்றம் அமர்வு வழக்கு எண்.8/2018 ல் 24.07.2025 அன்று வழங்கிய

தீர்ப்புரையை இதன் மூலம் ரத்து செய்தும் எதிரியை கு.வி.மு.ச பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்தும் தீர்மானித்து பிரச்சனை எண்கள் 1 மற்றும் 2 க்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

முடிவில், இந்த மேல்முறையீடானதை அனுமதித்தும் சாத்தூர், உதவி அமர்வு நீதிமன்றத்தில் கடந்த 24.07.2025 ல் அமர்வு வழக்கு எண்.8/2018 ல் வழங்கிய தீர்ப்புரை இதன் மூலம் ரத்து செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சா.பொ.1 ஆன TN 23 X 3101 டிராக்டர் மற்றும் TN 67 S 5055 டிரைலரை இடைக்கால பொறுப்பில் பெற்று சென்றுள்ளதை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அவரே வைத்து கொள்ளவும் பிணைமுறியை ரத்து செய்யவும் ஒரு வேளை ஷை சா.பொ.1 கைப்பற்றப்பட்டு கோட்டாட்சியர் வசம் ஒப்படைக்கப்பட்டிருந்தால் அதனை மீண்டும் உரிமையாளரிடம் ஒப்படைக்க அரசு தரப்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

T V MANI

Digitally signed by T V MANI
Date: 2026.08.05 17:18:00 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**திருவில்லிபுத்தூர்.**

<u>நகல்:–</u>
உதவி அமர்வு நீதிமன்றம், சாத்தூர்.

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
திருவில்லிபுத்தூர்
கு.மே.வ.எண்.103/2025
சீரான/வரைவு – தீர்ப்புரை
05.08.2026

CA.No.103/2025 - AFT - Judgment Dated:05.08.2026

Judgment is pronounced. As a result, the Criminal Appeal No.103 of 2025 is hereby Allowed. And the Judgment passed in SC.No.8 of 2018, dated 24.07.2025 by the Assistant Sessions Court, Sattur is hereby set aside. And as far as MO.I is concerned it is ordered it was handed over to the interim custody of the owner. And it is to be retained by her after the Appeal time is over. The bond shall be forfeited. If it is captured or if it is in the custody of R.D.O, it shall be returned to the owner in accordant with Law.

Additional District and Sessions Judge,
Srivilliputhur.